DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE FAST TRACK COURT (M.L) UTHAMAPALAYAM

Case No. STC.No.112/2025

Deposition of DW2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.செல்வக்குமார் |
| Father's / Husband Name | : | மொக்கையத்தேவர் |
| Village | : | |
| Taluk | : | உத்தமபாளையம் |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of February 2026.

புகார்தாரர் ஆஜர்.

<u>முதல் விசாரணை:</u>

1. புகார்தாரரை எனக்கு தெரியும். எதிரியை எனக்கு தெரியும். சோனைமுத்து எனது சித்தப்பா சிவாஜி என்பவரிடம் 2014 ல் பணம் கேட்டார். அப்போது எனது சித்தப்பாவிடம் பணம் இல்லாததால் சிவாஜியின் அண்ணன் கூடலூரைச்சேர்ந்த தர்மர் என்பவரிடம் பணம் உள்ளதாக கூறி தர்மர் வீட்டிற்கு நானும், சிவாஜியும் சோனைமுத்தை அழைத்து சென்று ரூ.1 லட்சம் தர்மரிடமிருந்து வாங்கி கொடுத்தோம். மேற்படி தொகைக்கு பொறுப்பிற்காக கையொப்பம் மட்டும் செய்து நிரப்படாத இந்தியன் வங்கி, தேனி கிளையின் காசோலையை சோனைமுத்து தர்மரிடம் கொடுத்தார்.

2. அதன்பின்பு அவர்களுக்குள் அறிமுகமாகி வட்டி கொடுக்கல் வாங்கல் இருந்தது. 2020 ல் சோனைமுத்து என்னை அழைத்து அவர் தர்மரிடமிருந்து மொத்தம் ரூ.4 லட்சம் வாங்கியிருந்ததாகவும், திருப்பி ரூ-2 லட்சம் கொடுத்துவிடுவதாக கூறி என்னை அழைத்து சென்று ரூ-2 லட்சம் பணத்தை கொடுத்து விட்டு சோனைமுத்து கையொப்பம் செய்த

புரோநோட்டை தர்மரிடமிருந்து வாங்கி வந்தோம். அதன்பின்பு தர்மர் இறந்து விட்டார். 2022ல் தர்மர் மகன் ராஜ்குமார் மீதி ரூ2 லட்சம் சோனைமுத்துவிடம் கேட்டார். அதற்கு ரூ.1 லட்சம் தயார் செய்து வைத்திருந்தார். புகார்தாரர் சின்னமனூர் ராஜேந்திரன் என்பவரது வழக்கறிஞர் அலுவலகத்திற்கு அழைத்ததன் பேரில் நானும், சோனைமுத்து சென்றபோது அங்கு சிவாஜி, சிங்கப்பெருமாள், ADSP தர்மராஜ் ஆகியோர்கள் இருந்தார்கள். அப்போது சோனைமுத்து ரூ.1 லட்சம் கொடுத்துவிட்டு புரோநோட்டை வாங்கி வந்தோம்.

3. அப்போது புகார்தாரர் மீதி ரூ.1 லட்சம் மற்றும் 3 மாத வட்டி நிலுவையில் உள்ளதாக கூறினார். பின்னர் சோனைமுத்து காலஅவகாசம் கேட்டார். தர்மரிடம் கொடுத்த காசோலையை வைத்து அவரது மகன் ராஜ்குமார் சோனைமுத்துவின் மீது வழக்கு தாக்கல் செய்ததாக எதிரி என்னிடம் கூறினார்.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

புகார்தாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

AMALANATHA KAMALAKANNAN S
Digitally signed by AMALANATHA KAMALAKANNAN S
Date: 2026.02.17 16:18:27 +0530

J.M, F.T.C(M.L),Uthamapalayam